# நாடி ஜோதிடம் ஓர் ஆய்வு

**முனைவர் கு. மகாலட்சுமி**
முதுநிலை ஆராய்ச்சியாளர், நாடிஜோதிடம் குறித்த ஆய்வாளர்


■ முனைவர் கு.மகாலட்சுமி,
முதுநிலை ஆராய்ச்சியாளர்

"எந்த ஓர் அரிய கலை ஆயினும் அது உண்மையின் அடிப்படையில் மட்டுமே திறம் பெற முடியும்"

முன்பே எழுதி வைக்கப்பட்ட சாதகங்களை உள்ளடக்கிய நூல்களுக்கு நாடி ஜோதிட நூல்கள் என்று பெயர். அவற்றில் இருந்து கேட்க வந்தவருக்குப் பொருந்தும் நிலையில் உள்ள பகுதியை எடுத்துப் பலன் கூறுவதற்கு நாடிசோதிடம் என்று பெயர். ஒருவனுடைய பிறந்த நேரச் சாதகக் கட்டத்திலுள்ள கோள்கள், அதே நிலையில் நாடியிலும் இருந்தால் அந்தச் சாதகருக்குரிய நாடி ஜோதிடச் சுவடி கிடைத்துவிட்டது என்று பொருள். இதில் எதிர்காலம் உட்பட அனைத்துப் பலன்களும் இருக்கும். மனிதனின் வேட்கையில் மிகப்பெரிய வேட்கை தன் எதிர்காலத்தை மற்றும் நெருங்கியவர்களின் எதிர்காலத்தை அறிய முயல்வதே.

முற்பிறப்புப் பற்றியும், அப்பிறப்பில் எதுவாக இருந்தனர், என்னென்ன செய்தனர் என்பன பற்றியும் இது கூறுவதால் மக்களில் பலர் நாடி ஜோதிடத்தை விரும்பிக் கேட்கின்றனர்.

நாடி ஜோதிடத்தின் தோற்றம்

நாடி ஜோதிடத்தைப் படைத்தவர்கள் அகத்தியர், வசிட்டர் போன்றோர் என்று கூறுகின்றனர். தொடக்க காலத்தில் பலருக்கும் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான சாதகங்கள் தொகுக்கப்பட்டு அவையே பின்னர் நாடி ஜோதிடங்களாக ஆகி இருக்குமா என்றும் நினைத்துப் பார்க்க முடியும். மேலும் வெள்ளைத் தாளைக் கையில் வைத்துக் கொண்டு நாடி ஜோதிடம் கூறுபவர்களும் உள்ளனர். எனவே முன்பு எழுதப்பட்ட ஒன்று என்ற அளவில் மட்டும் நாடி ஜோதிடத்தின் ஆய்வுப் பரப்பு நின்றுவிடவில்லை.

யோக நிஷ்டையில் அதாவது சமாதி நிலையில் இருந்துகொண்டு ஞான திருஷ்டி-யால் நாடி ஜோதிடத்தை எழுதினர் என்ற குறிப்புகளும் கிடைக்கின்றன. இவ்வாறு பல நூற்றாண்டுகளாக எழுதப்பட்டவை கட்டுக்-கட்டுக்-களாகக் கட்டப்பட்டுக் கோவில்களில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. பல்வேறு காரணங்களால் பெரும்பாலும் இந்த நாடிஜோதிடச் சுவடிகள் அழிந்து விட்டன. தொடர்ந்து படியெடுக்கப்பட்டுக் காப்பாற்றப்-பட்டு வந்தவை பல்வேறு நபர்களால் சொந்தம் கொண்டாடப்பட்டன. இவை குறிப்பிட்ட நபர்களின் பரம்பரைச் சொத்தாகவும், வருவாய் தரும் தொழிலாகவும் ஆகிவிட்டன.

நாடியின் வகைகள்:

அகத்தியர் நாடி, வசிட்டர் நாடி, புசங்கர் நாடி, ஜோதி நாடி, குமர நாடி முதலான பல வகை நாடி சோதிடங்கள் உள்ளன. ஏட்டின் முற்பகுதி பிரார்த்தனையாகவும், இரண்டாம் பகுதி குறிப்பிட்ட சாதகரின் சென்ற, எதிர்கால வரலாறு கூறும் பகுதியாகவும், மூன்றாம் பகுதி ஆசிர்வாதம் தரும் பகுதியாகவும் உள்ளன. ஒவ்வொரு நாடி நூலிலும் உதயகாண்டம் முதலாகச் சாந்தி காண்டம் ஈறாகப் பன்னிரண்டு காண்டங்கள் உள்ளன.

ஒருவரின் பெயர், அவருடைய பெற்றோர்-களின் பெயர், தொழில்கள், திருமணம், வாழ்நாளில் ஏற்பட இருக்கும் நிகழ்ச்சிகள், வெளிநாட்டுப் பயணம், சொத்துகள், வாகனங்-கள் முதலியவற்றை இந்நாடிகளின் வழி அறிய முடிகிறது.

நாடி ஜோதிட நிலையங்கள்:

நாகப்பட்டின மாவட்டத்திலுள்ள வைத்தீஸ்-வரன் கோவிலில் மிகப் பெருமளவில் நாடி ஜோதிடம் பார்க்கப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டம், வேலூர் வந்தவாசியை அடுத்த நாவல்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அச்சிறுபாக்கம், சென்னை - தியாகராய-நகர், தாம்பரம், அடையாறு முதலான இடங்களிலும் நாடி ஜோதிடம் சொல்லப்-படுகின்றது. மேலும் அகத்தியர், கவுசிகர், காக்கை புசுண்டர், வால்மீகி, ஸ்கந்தர், மீனாட்சி, சண்முகன் , கணபதி போன்ற பெயர்களில் பல ஜோதிட நிலையங்கள் உள்ளன.

பல இடங்களில் ஓரிரு சுவடிக் கட்டுகளை மட்டுமே வைத்துக் கொண்டு பலன் கூறுகின்றனர். அவர்களைத் தேடி வரும் நூற்றுக்கணக்கான மக்களின் சாதகம் இவ்வளவு குறைந்த கட்டுகளுள் எப்படி அடங்க முடியும். பலர் அதிகக் கட்டுகளை வைத்துள்ளனர். இருப்பினும் ஓர் இலக்கினத்-தில் (மொத்தம் 12 இலக்கினங்கள்) பிறந்தவர்கள் மட்டுமே ஆயிரக்கணக்கில் இருப்பர். எனவே அதிகக் கட்டுகளை வைத்திருந்தாலும் கூட அனைவருக்கும் ஏடு கிடைப்பது என்பது இயலாத ஒன்று. எனவே பணத்தை முதன்மை-யாகக் கருதி இத்தொழில் புரிகின்றவர்கள் ஏதோ ஒரு வழியில் ஜோதிடம் கேட்க வருகின்றவர்களைச் சரிக்கட்டுகின்றனர். இதற்-காக இந்நிலையங்களில் பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன.

www.prohithar.com

முதல் வகை:

முகவரி, பிறந்த நேரம், மாதம், ஆண்டு முதலியவற்றைக் கேட்க வந்தவர் எழுதிக் கொடுக்க வேண்டும். முன் பணம் கட்டியபின் அவருக்கு ஒரு குறிப்பிட்ட நாளைக் குறித்துத் தருவர். பலர் பதிவு செய்துள்ளதால் இவருக்குப் பார்க்க இத்தனை நாள் ஆகிறது என்பது வெளிப்படையாகத் தெரியும் பொருள். ஆனால், இதற்கிடையில் இவரது ஊருக்கு, இவருக்குத் தெரியாமல் வந்து இவரது குடும்ப உறுப்பினர், கடந்த கால, நிகழ்கால செய்திகள் போன்றவற்றை அறிந்து செல்வர். வெளியூரில் இருந்து கேட்க வந்தவர்கள் விடுதிகளில் தங்கிக் காத்திருப்பர். அவர்களிடம் இருந்தும் செய்திகளைப் பெற்றுச் செல்வதுண்டு. குறிப்பிட்ட நாட்களில் அவர்கள் வர இவர்கள் பாடல்களாகப் பாடி விளக்கங்கள் தருவர்.

இரண்டாம் வகை:

நாடி ஜோதிடம் கேட்க வந்து பலர் காத்துக் கொண்டிருப்பர். நாடி ஜோதிடரின் ஆட்கள் சிலர் தாங்களும் நாடி பார்க்க வந்தவர்கள் போல் காட்டிக் கொள்வர். பின் இவர்களிடம் பேச்சுக் கொடுத்து குடும்ப விவரம், பிரச்சனை முதலியன தெரிந்து அவற்றை உள்ளே ஒப்படைப்பர். இவை கவிதையாக எழுதப்-பட்டு அவரவர்களுக்குத் தக்கவாறு படிக்கப்படும்.

மூன்றாம் வகை:

எட்சனி, மாடன் போன்ற சிறு தேவதை-களின் உதவியினால் கடந்த காலப் பலன்களை அறிந்து கூறுவர். கேட்க வந்தவர் கடந்த காலப் பலனைக் கேட்டு வியந்து போய் விடுவார். அதுமட்டுமல்ல எதிர்காலப் பலனாக எது சொன்னாலும் அதனை ஏற்றுக் கொள்ளக்-கூடிய மனநிலைக்கும் சென்று விடுவார்.

நான்காம் வகை:

வந்தவரின் கட்டைவிரல் இரேகை பதிவு செய்யப்படுகிறது. அதன் வழி மலர்ச்சுழி, புள்ளி, இரட்டைச் சுழி, இருபுள்ளி, நேர்க்கோடு, பல புள்ளி என்பன போன்ற குறிப்புகளை எடுக்கின்னர். பின் அதற்குரிய சுவடி என ஒன்றைக் கொண்டு வந்து படிக்கின்றனர். அதில் பொதுக்காண்டம், தீட்சை காண்டம், ஆரூட காண்டம், கல்வி, தொழில், திருமணம், சாந்தி காண்டம் எனப் பன்னிரண்டு காண்டங்கள் இருக்குமாம். ஒவ்வொரு காண்டத்திற்கும் 100, 200 என வாங்குகின்றனர். 10,000, 30,000 எனப் பெரிய தொகை வாங்கும் நாடி ஜோதிடர் பலர் இன்றும் உள்ளனர். கொண்டு வந்து படித்தது பொருந்தா-விட்டால் வேறு கட்டைக் கொண்டு வந்து படிக்கின்றனர். இடையிடையே பலவிதமான கேள்விகளைக் கேட்கின்றனர். இம்முறையில் பலருக்கு ஏடு கிடைப்பதில்லை. ஜோதிடர் திறமையால் தான் சரிகட்டப்படுகின்றது.

அய்ந்தாம் வகை:

கேட்க வந்தவர்களின் விவரங்களைப் பெற்றுக் கொள்வர். ஏடு கிடைக்கவில்லை எனப் பலமுறை அவர்களைத் திருப்பி அனுப்புவர். இறுதியில் ஒரு சுவடிக் கட்டைக் கொண்டு வந்து அதிலுள்ள சில ஏடுகளில் உள்ளதை எடுத்து எழுதிக் கொடுப்பர்.

ஆறாம் வகை:

இந்நிலையங்களில் 20 வயது முதல் பலரை நாடி படிப்பதற்காக வைத்திருப்பர். இவர்-களுள் சிலர் அங்கிருந்து வெளியேறித் தனியாக நாடி ஜோதிட நிலையங்களைத் தொடங்கி விடுகின்றனர். தாம் கற்று வந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு, கேட்க வந்தவர்களைப் பல சுவடிக் கட்டுகளின் துணையோடு பலன் கூறிச் சரி கட்டுகின்றனர்.

பலன் கூறுவதிலுள்ள உத்தி:

நாடிச் சுவடிகள் என்பவை மிகப் பழைய பனை ஓலைகளில் எழுதப்பட்டவை. ஆனால் பலர் பழையதுபோல் புதிய ஓலைகளை மாற்றிச் செய்திகளை முன் கூட்டி எழுதி வைத்துப் படிக்கின்றனர். ஜோதிடச் சுவடி அல்லது மாணிக்கவாசகர் அம்மானை போன்ற இலக்கியச் சுவடிகளைக் கையில் வைத்து இருப்பர். அதனைப் பார்த்துப் பார்த்துப் படிப்பதுபோல் நடித்து, இவர்கள் கூற விரும்பும் ஜோதிடச் செய்திகளைப் பாடல் வடிவில் படிப்பர். அதாவது ஓலைச் சுவடியில் உள்ளதைக் கூறாமல் அவர்களாகப் பலன் கூறுகின்றனர்.

நாடி ஜோதிடம் பற்றி ஆய்வு நோக்கில் அறிந்து ஞான மார்க்கம் என்ற பெயரில் வெளிவரவுள்ள நூலில் (நூல் வெளிவந்து விட்டது) எழுதுவதற்காகச் ஜப்பாணியர் இருவர் 1995இல் சென்னைக்கு வந்திருந்தனர். இவர்களுக்குரியது என்று கூறித் தாம்பரத்தில் படித்துக் காட்டிய சுவடி ஏடுகளைப் புகைப்படம் எடுத்து வந்திருந்தனர். அப்புகைப் படத்தில் எழுத்துகள் இ.சி.ஜி. வரைபடத்தில் உள்ள வளைவு வளைவான கோடுகளைப் போல இருந்தன. அவை தமிழ் எழுத்துகளாக மட்டுமல்ல வேற்று மொழி எழுத்துகளாக இருப்பதற்கும் வாய்ப்பில்லை. புகைப்படத்-திலுள்ள செய்தியைத் தான் நோட்டில் எழுதிக் கொடுத்துள்ளனரா என்பதை நன்கு சுவடி படிக்கத் தெரிந்தவர்கள் கூட ஊகிக்க முடியாது. மேலுமிவர்கள் நாடி சோதிடரில் சிலர் கேள்வி கேட்கத் தொடங்கியவுடன் அல்லது படம் எடுக்கத் தொடங்கியவுடன் பயப்பட்டனர் என்பதையும் தெரிவித்தனர்.

www.prohithar.com

ஜப்பாணியர் உட்பட வெளிநாட்டவர் பலரும் இங்கு வந்து நாடி பார்க்கின்றனர். வெளிநாட்டில் இருந்து பலன் கேட்பதற்காக மட்டுமே வந்து, **<u>பெரும் செலவு செய்து திரும்பும் அவர்களுக்குக் கிடைக்கும் செய்தி-களின் தரம் இப்படி இருப்பது சிந்திக்க வேண்டிய ஒன்று மிகவும் வருந்தத்தக்கது கூட</u>**.

பொய்மையை அறிந்தவர்கள் கூடத் தங்களு-டைய பலவீனத்தின் காரணமாக நாடி ஜோதிடத்தை அணுகுகின்றனர். அவர்கள் பொய் புரட்டு இருந்தாலும் நமக்குச் சரியாக ஏடு கிடைக்கலாம் என நம்புகின்றனர். எனவே மக்கள் எத்தகைய மன உணர்வு உடையவர்-களாக இருந்தாலும் இதன் பால் ஈர்க்கப்படவே செய்கின்றனர்.

மேலும் அனைவரும் அனைத்து நேரங்-களிலும் மன வலிமையுடன் இருத்தல் என்பது கடினம். எனவே, மன வலிமையை இழக்கும்-போது ஜோதிடம், நாடி ஜோதிடம் போன்றவற்றின் மீது நாட்டமும் நம்பிக்கையும் ஏற்படுவது என்பது தவிர்க்க இயலாததாக இருக்கின்றது.

ஜோதிடம் மற்றும் நாடி ஜோதிடம் போன்றவற்றில் உள்ள பொய்மைகளை, குறைபாடுகளை, மாற்றங்களை அறியாமையை, ஒழுக்கக் கேடுகளை, குழப்பங்களை, பொருள் இழப்புகளை, ஏமாற்றங்களை, கண்மூடித்தன-மான, முரட்டுத் தனமான போக்குகளை ஆய்ந்து உண்மையை உணர்த்தினால் மக்கள் இத்தகைய போக்குகளில் இருந்து மெல்ல மெல்ல விடுபடுவர்.

**இதற்கு முதற்படியாக, அரசாங்கம் நாடிச் ஜோதிடச் சுவடிகள் அனைத்தையும் தொல் பொருள் என்னும் அடிப்படையில் கைக்-கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும்.**

நன்றி : விடுதலை http://files.periyar.org.in/unmaionline/2008/20080802/page01.html

---

**நாடிஜோதிடத்தின் முறைகேடுகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு - தமிழாராய்ச்சி பேராசிரியர் வாக்குமூலம்**

சீர்காழி, செப். 12- வைத்தீசுவரன் கோயில் பகுதியில் நாடி ஜோதி டத்தில் நடைபெற்று வரும் முறைகேடுகளை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந் துள்ள தமிழாராய்ச்சிப் பேரா சிரியர் பரபரப்பான வாக்கு மூலம் ஒன் றை அளித்துள்ளார்.

சீர்காழி வட்டம் திருக் கோலக்கா தெருவைச் சேர்ந்த பண்டரிநாதனின் மகன் கோபாலகிருஷ்ணன் கடந்த 21-9-2008 அன்று வைத்தீசுவரன் கோயிலில் உள்ள சிவசாமி நாடிஜோதிட நிலையத்துக்குச் சென்று நாடிஜோதிடம் பார்த் துள்ளார். அப்போது முன் னுக்குப் பின் முரணான சேதிகளை ஜோதிடம் கூறி யுள்ளார். திருமணமாகாத கோபாலகிருஷ்ணனுக்குத் திருமணம் ஆகிவிட்டது என் றும், உயிரோடு உள்ள அம் மாவை இறந்து விட்ர் என் றும், வேளாண்மைத் தொழில் செய்து வருபவரை மின் வாரியத்தில் பணிபுரிபவர் என் றும், பத்தாம் வகுப்பு படித்த வரைப் பட்டப்படிப்பு படித் துள்ளார் என்றும் கூறியுள் ளார். இதனால் ஆத்திரம டைந்த கோபாலகிருஷ்ணன் 2003 ஆம் ஆண்டில 35 வயதில் இறந்து போன தனது உறவினர் செங்குட்டுவனுக்கு நாடி ஜோதிடம் பார்த்துள்ளார். அப்போது அவர் 75 வயது வரை நலமோடும் வளமோடும் வாழ்வார் என ஜோதிடர் கூறியுள்ளார்.

இந்த முறைகேடுகள் குறித்து வழக்குரைஞர் சோம சுந்தரம் என்பவர் மூலம் சீர்காழி குற்றவியல் நீதிமன்றத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்பு கோபால கிருஷ்ணன் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கு விசாரணை நேற்று நடைபெற் றது. ஓலைச்சுவடிகள் பற்றி சாட்சியம் அளித்த சென்னையைச்சேர்ந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் மகாலட்சுமி நீதி மன்றத்தில் அளித்த விளக்கமாவது:

**ஓலைச்சுவடி என்பது பாடல் களை மனப்பாடம் செய்து பின்னர் அதனை ஓலைச்சுவடி களில் எழுதினர். களவியல் உரை 9 தலைமுறைகளாக மனப்பாடம் செய்த பின்னர் தான் ஓலைச்சுவடிகளில் எழு தப்பட்டது. ஆயிரக்கணக்கான பாடல்களை மனப்பாடம் செய்து கொண்டு ஏதோ ஒரு ஓலைச்சுவடியைப் படிப்பது போல் நாடிஜோதிடம் பார்க் கின்றனர். மாணிக்கவாசகர் அம்மானே என்ற இலக்கியப் புத்தகங்களை வைத்துக் கொண்டு பாடல்கள் பாடிக் கொண்டு ஜோதிடம் பார்க் கின்றனர். இவர்களே ஓலைச் சுவடிகளை உருவாக்கிக் கொள்கின்றனர். ஓலைச் சுவடி களில் எழுதும்போது ஏடு மட்டுமே நகரும். கை நகராது. நாடிஜோதிடத்தில் உள்ள ஓலைச்சுவடியில் உள்ள எழுத்து வடிவத்தைப் பற்றி ஓலைச்சுவடியை நன்கு அறிந்த வர்கள் கூடப் படிக்க இயல வில்லை. ஒரு சில எழுத்துக் களைக் கொண்டு இவர்களே திட்டமிட்டு ஓலைச்சுவடி களை உருவாக்குகின்றனர். --**இவ்வாறு பேராசிரியர் மகாலட்சுமி வாக்குமூலம் அளித்தார்.

நீதிபதி இந்த வழக்கு விசாரணையை அக்டோபர் 30 2008 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

---

இந்த கட்டுரை கருத்து, எழுத்து சுதந்திரம் அடிப்படையில் தரப்படுகிறது, கட்டுரையாளரின் நோக்கம் ஒரு கலை நேர்மையாகவும், திறம்படவும் இருத்தல் வேண்டும் என்பதே. அவர் வாதங்களில் சிலவற்றை மறுக்க இயலாது என்பது உண்மை. அந்த நிலையில் இதை தங்களின் பார்வைக்கு எவ்வித இடைச்செருகலும், திருத்தமும் இன்றி மூலத்தை அளிக்கிறேன் .

எளிதாக அச்சு எடுக்கவும், படிக்கவும், மின்னஞ்சலில் பரப்புரைக்கு பயன் படும் வகையில் இதை அளித்துள்ளேன்



www.prohithar.com